இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 19-07-2023

# கலைஞர் அறிவாலயம்!

ஜெயலலிதாவுக்கு பிறந்தநாள் வந்தால் மண்சோறு சாப்பிடும் கூட்டம், இப்போது எடப்பாடி பிறந்தநாளுக்கும் மண் சோறு சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறது. இந்தக் கும்பல், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவுக்கு என்ன செய்தது? கடற்கரை மணலுக்கு எதிரே, அவர் பெயரால் ஒரு வளைவு திறந்தது!

குனிந்தும் - ஊர்ந்தும் பிழைப்பவர்களுக்கு ‘வளைவுகள்’தானே பிடிக்கும்? அதைத் தாண்டி மூளை வளராது என்பதை தமிழ்நாடு அறியும். அத்தகைய தற்குறிக் கூட்டத்தின் தலைமைக் கழகப் பிரதிநிதிகளில் ஒருவர், ‘மதுரை நூலகத்துக்கு திருவள்ளுவர் பெயர் வைத்திருக்க வேண்டும்’ என்கிறார். ஐம்பது ஆண்டுகளாக அவரது மூளை கோமாவில் கிடக்கிறதா என்று தெரியவில்லை.

**1975 ஆம் ஆண்டே தமிழ்நாட்டின் தலைநகரில் வள்ளுவர் கோட்டம் அமைத்தவர் தமிழினத் தலைவர் கலைஞர். 2000 ஆம் ஆண்டிலேயே கடல் நகராம் கன்னியாகுமரியில் 133 அடியில் வான்புகழ் வள்ளுவருக்கு சிலை அமைத்தவர் கலைஞர். ஓடும் பேருந்துகள் அனைத்திலும் வள்ளுவர் படமும், திருக்குறளும் எழுதி வைத்த ஆட்சி தி.மு.க. ஆட்சி. குறளோவியம் தீட்டியவர் கலைஞர். திருக்குறள் உரை தீட்டியவர் கலைஞர். தமிழ்நாடு சட்டமன்றத்துக்குள் திருவள்ளுவர் படம் வைக்கப்பட்டதே அவரது தூண்டுதலால் தான். எனவே, குறளுக்கும் குறளாசானுக்கும் பெருமை சேர்க்க தி.மு.க.வுக்கு யாரும் சொல்லித் தரத் தேவையில்லை. இந்த தற்குறிகளின் ஆட்சியில் திருவள்ளுவருக்கு என்ன செய்யப்பட்டது என்றால் ஏதுமில்லை என்பதே பதில்.**

**இன்னொரு கும்பல் எழுதுகிறது... ‘இந்தக் காலத்தில் நூலகம் எதற்காக?” என்பது சனாதனக் கும்பலின் கருத்தாக இருக்கிறது. மூளையே தேவையில்லை என்று நினைக்கும் கூட்டம் அது. நூலகம் எதற்காக என்றால், அது மூளை உள்ளவர்கள் தேடும் இடமே தவிர, அந்தக் கும்பல் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அவர்களுக்கு இது அவசியமும் அல்ல.**

மதுரை - புது நத்தம் சாலையில் அமைந்துள்ள இந்த நூலகமானது 120.75 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. 2 லட்சத்து 13 ஆயிரத்து 338 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது. 3.50 லட்சம் புத்தகங்கள் அதில் வைக்கப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் – கலைஞர் பிரிவு, குழந்தைகள் நிகழ்ச்சி அரங்கம், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் பிரிவு, குழந்தைகளுக்கான நூலகம், சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு -2, அறிவியல் உபகரணங்கள் பிரிவு அமைக்கிறது.

2-ஆம் தளத்தில் தமிழ் நூல்கள் பிரிவு (குறிப்பு உதவி நூல்கள் பிரிவு) மற்றும் கலைஞரின் நினைவைப் போற்றும் வகையில் அவரது கவிதைகள், கட்டுரைகள், அரசியல், இலக்கியம், வரலாறு புத்தகங்கள், திரைப்படத் துறை தொடர்பான புத்தகங்கள் அடங்கிய தனிப்பிரிவுகளும் இடம் பெறுகின்றன.

3-வது தளத்தில் ஆங்கில நூல்கள் , ஆராய்ச்சி இதழ்கள், தமிழ் நூல்கள் அடங்கிய பிரிவுகள் அமைகின்றன.

4-வது தளத்தில் போட்டித் தேர்வர்களுக்கான பல்வேறு துறை சார்ந்த நூல்கள் பிரிவு அமைகிறது.

5-ஆம் தளத்தில் அரிய நூல்கள், மின் நூலகம், பல்லூடகம், நூல்கள் பாதுகாத்தல், ஒளி, ஒலி தொகுப்புகள், காட்சியகம், மின்னுருவாக்கம், பார்வையற்றோருக்கான மின் நூல், ஒலி நூல் ஸ்டுடியோ, நுண்பட அட்டை அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

6-வது தளத்தில் ஆங்கில நூல்கள் (நூல் இரவல் பிரிவு), நூல் பகுப்பாய்வு, நூல் பட்டியல் தயாரித்தல், நூலக நிர்வாகம், நூல்கள் கொள்முதல், பணியாளர்கள் உணவருந்தும் பிரிவுகளும் அமைகின்றன.

கலைக்கூடம், மாற்றுத்திறனாளி பிரிவு, மாநாட்டுக்கூடம், முக்கிய பிரமுகர்கள் அறை, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, பல்வகை பயன்பாட்டு அரங்கம், உறுப்பினர் சேர்க்கைப் பிரிவு, மின் கட்டுப்பாட்டு அறை, நகரும் படிக்கட்டுகள், அஞ்சல் பிரிவு என அனைத்து வசதிகளோடும் அமைக்கப்பட்டுள்ளது.

**இதில் மிக முக்கியமானது நான்காவது தளத்தில் அமைந்துள்ள போட்டித் தேர்வு பிரிவு ஆகும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தொடங்கி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வாரியத்தாலும் மற்ற அமைப்புகளாலும் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளையும் எழுதுவதற்கான நூல்கள் இதில் இருக்கின்றன. 30 ஆயிரம் புத்தகங்கள் இருக்கின்றன. அரசு மற்றும் உயர் பொறுப்புகளை அடைய தென் மாவட்ட இளைஞர்களுக்கு அறிவுச் சுரங்கமாக இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதுதான் இந்தக் கும்பலுக்கு கடுப்பாக இருக்கிறது.**

**படிக்கக் கூடாது - பள்ளிகளுக்குள் நுழையக் கூடாது - கல்லூரிகளின் படியை மிதிக்கக் கூடாது என்று காலம் காலமாகச் சொல்லி வந்த கும்பல் தான், ‘நூலகங்களால் என்ன பயன்?’ என்று இப்போது கேட்கிறது. யாரையும் படிக்க விடாத காலத்தில், ‘படிப்புதான் முக்கியம்’ என்றார்கள். எல்லோரும் படிக்கத் தொடங்கியதும், ‘படிப்பால் என்ன பயன்?’ என்கிறார்கள். ‘பேச நா இரண்டுடையாய் போற்றி போற்றி’ என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா.**

‘படித்துவிடு, எங்காவது போய் முன்னேறி விடு’ என்றார் தந்தை பெரியார். குலக்கல்வி கொண்டு வந்து தமிழர் வீட்டுப் பிள்ளைகளைப் படிக்க விடாமல் சதி செய்த இராஜாஜியின் காலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து - பெருந்தலைவர் காமராசர் காலத்துக்கு தொடக்கப்புள்ளி வைத்தார் தந்தை பெரியார். குலக்கல்வியை ஒழித்த காமராசர், மூடிய பள்ளிகளையும் திறந்தார். புதிய பள்ளிகளையும் திறந்தார். அந்தப் பள்ளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து, கல்லூரிகளை அதிகமாகத் திறந்தார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். இன்றைய திராவிட மாடல் ஆட்சியானது பள்ளி - கல்லூரி படிக்கும் அனைவரையும் அனைத்துத் துறையிலும் தகுதி உள்ளவர் ஆக்கும் ‘நான் முதல்வன்’ திட்டம் தொடங்கி இருக்கிறது. இளைய சக்தி அனைத்தையும் தகுதியுடைய அறிவு சக்தியாக மாற்றிக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பட்டம் வாங்கினால் போதாது. அதிக மதிப்பெண் வாங்கினால் மட்டும் போதாது. அனைவரும் அனைத்துத் திறமைகளும் பெற்றாக வேண்டும் என்று நினைக்கிறார் முதலமைச்சர் அவர்கள். அதற்கு தென் மாவட்டத்து மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் அறிவாலயமாக அமைக்கப்பட்டுள்ளது தான் ‘கலைஞர் நூற்றாண்டு நூலகம்’ ஆகும்.

**சென்னையில் பேரறிஞர் அண்ணா பெயரால் நூலகம் அமைத்தார் கலைஞர் அவர்கள். கலைஞர் பெயரால் நூலகம் அமைத்துள்ளார் இன்றைய முதலமைச்சர் அவர்கள்.**

**இவை தமிழ் அறிவின் தொடர்ச்சியாகும். தமிழ்நாட்டு மக்கள் மீதான அக்கறையின் வெளிப்பாடு ஆகும். இதனை தற்குறிக் கூட்டமோ, சனாதனக் கூட்டமோ புரிந்து கொள்ள முடியாது. இவர்கள் குறை சொல்கிறார்கள், கோபம் கொள்கிறார்கள், வயிற்றெரிச்சலை வெளிப்படுத்துகிறார்கள் என்றால் அரசு சரியான திசையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது என்று பொருள்.**






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெங்களூரில் மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்பாக நேற்று முன்தினம் (17.7.2023) சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், துணை மேயர் ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் சங்கத் தமிழ் இசை நாட்டிய நாடக நிகழ்ச்சி !

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, ஜுலை 19-*

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் 16.07.2023 அன்று சென்னை ராஜாஅண்ணாமலைபுரம், திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் கலையரங்கத்தில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் (கலைப் பண்பாட்டு இயக்ககம்) சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கலைமாமணி முத்தரசி ரவியின் கலைக்கோயில் நாட்டியப் பள்ளியின் “முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சங்கத் தமிழ்” இசை நாட்டிய நாடக நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நிகழ்ச்சியை பார்வையிட்டு பேசியதாவது:-

தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றத்தின் உறுப்பினர் - செயலாளர் திருமதி. விஜயா தாயன்பன், உலகளந்த பெருமை கொண்ட தலைசிறந்த பரதநாட்டியக் கலைஞர் திருமதி.சித்ரா விஸ்வேஸ்வரன் ஆகியோர்க்கும் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சங்கத்தமிழ்” இசை நாட்டிய நாடகத்தைக் கண்டு களிக்க வருகை புரிந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இயல், இசை, நாடகம் என முத்தமிழையும் வளர்த்து வரும் கலை பண்பாட்டு இயக்கத்தின் ஓர் அங்கமாகத் திகழும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் நடத்தப்பெறும் நாட்டியப் பெருவிழா முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இன்று நம்மோடு உருவமாக இல்லை என்றாலும் தன் எழுத்துகளால், உரைகளால், திரைவசனங்களால், பாடல்களால், நாடகங்களால், அனைத்து வகையிலும் முத்தமிழுக்குப் பெருமை சேர்த்து இன்றும் நம்மோடு வாழ்கிறார்.

சங்கீத நாடக சபைக்கு “தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்” என முத்தமிழையும் சேர்த்து அருமையான தமிழ்ப்பெயர் சூட்ட முத்தமிழையும் ஆய்ந்தறிந்த முத்தமிழறிஞரைத் தவிர வேறு எவரால் முடியும்?

முத்தமிழறிஞரின் பாசறையில் பயின்று, பண்பட்டு, இன்று அவர் வழியில் முத்தமிழின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வரும், தமிழ்நாடு முதலமைச்சரை வாழ்த்தி வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தொன்மையான கலைகளை வளர்த்து, அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்து, அழிந்து வரும் கலை வடிவங்களை ஆவணமாக்கி, நாடகம், நாட்டிய நாடகங்களுக்குப் புத்துயிர் அளித்து, தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை வெளிமாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் சென்று, தமிழ்க்கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு செய்யும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, நலிவடைந்த கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கி வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தை அருமையான இத்தருணத்தில் பாராட்டி மகிழ்கிறேன்.

முத்தமிழறிஞரின் அடிச்சுவட்டில்பீடுநடைபோட்டு வரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நமது அரசானது தமிழ்நாடு இயல், இசை நாடகமன்றத்தின் வாயிலாக, நலிவடைந்த கலைஞர்களுக்கு திங்கள் தோறும் ரூ.3,000/ நிதியுதவியும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், கலைக்குழுக்களுக்கும், இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்க ரூ.10,000/ நிதியுதவியும், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவியாக ரூ.25,000/ நிதியுதவியும், கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு ரூ.1,00,000/ நிதியுதவியும், தமிழில் அரும் பெரும் கலை நூல்களை வெளியிடும் நூலாசிரியர்களுக்கு தலா ரூ.2.00 இலட்சம் நிதியுதவியும் வழங்கி வருகிறது.

இவ்வகையில், கடந்த 14.1.2023 முதல் 17.1.2023 வரை 40-க்கும் மேற்பட்ட கலை வடிவங்களில், சுமார் 1000 கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டதை இங்கே குறிப்பிட விழைகிறேன்.

‘கலைச்சங்கமம்’ என்னும் நாட்டுப்புறக்கலை மற்றும் செவ்வியல் கலைத் திருவிழாவின் மூலம் பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மக்கள் கூடும் பிற இடங்களில் வார இறுதி நாட்களில் நடத்தப்பட்டு வரும் கலை நிகழ்ச்சிகள் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசின் சார்பில் நலிவடைந்த 23 கலைஞர்களின் மரபுரிமையினருக்கு ரூ.9.11 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதையும், 500 கலைஞர்களுக்கு மாவட்ட கலை விருதுகளும், ரூ.70 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதையும், 733 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களுக்காக ரூ.31.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதையும், 500 நாட்டுப் புறக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளதையும் இம்மன்றத்தில் பதிவு செய்வதில் பெருமை கொள்கிறேன்.

மேலும், உலக நாட்டிய தினமான ஏப்ரல் 29 அன்று ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், முத்தமிழறிஞரின் நூற்றாண்டுப் பெருவிழாவினைக் கொண்டாடும் வகையில் ரூ.1 கோடி மதிப்பில் தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளும், கலைஞரின் வாழ்க்கை வரலாறு குறித்த நாட்டிய நாடகங்கள் ரூ.15.00 இலட்சம் செலவிலும் நடத்தத் திட்டமிட்டுள்ளதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“முத்தமிழறிஞர் கலைஞரின் சங்கத்தமிழ்“ தமிழ் பல்கலைக் கழகத்தால் ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு மொழியில் மொழிப் பெயர்ப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சங்கத்தமிழ்” இசை நாட்டிய நாடகத்தைக் கண்டுகளிக்க வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி பாராட்டி அமர்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் மற்றும் சிதம்பரம் அகாடமி ஆப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் நிறுவனர் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தக்காளியின் விலையேற்றத்திற்கு உற்பத்திக் குறைவே காரணம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

*சிவகங்கை, ஜுலை 19-*

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா பழையனூரில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

சாதாரண மக்கள் முதல் உயர்தர மக்கள் வரை அன்றாடம் சமையலுக்கு பயன்படுத்தும் தக்காளிவிலை திடீரென உயர்ந்தது. இந்த விலை உயர்வினை கட்டுப்படுத்துமாறு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் தக்காளியை மக்களுக்கு குறைவான விலையில் தருவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. சென்னையில் அமுதம் கூட்டுறவு அங்காடியில் குறைந்த விலைக்கு தரப்பட்டது. தொடர்ந்து சென்னையில் மக்களுக்கு குறைவான விலைக்கு வழங்குவதற்காக 300க்கும் மேற்பட்ட கூட்டுறவுத்துறை கடைகளில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் 1கிலோ ரூபாய் 58முதல் ரூபாய் 80வரை விற்பனை செய்யப்படு கிறது. தக்காளி விலை ஏற்றம் குறித்து ஒன்றிய அரசு எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. பா.ஜ.க. ஆட்சி இல்லாத மாநில அரசுகள் மீது ஒன்றிய அரசு வஞ்சம் தீர்க்க பார்க்கிறது. இதன் மூலம் மக்களின் பிரச்சினைகளை திசை திருப்ப பார்க்கிறது. விரைவில் தக்காளி விலை கட்டுக்குள் கொண்டு வரப்படும். விலை குறைவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின்போது திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. திருப்பு வனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் ஆகியோர் உடன் இருந்தார்கள்.



தியாகிகள் தினத்தையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகளை நினைவு கூர்ந்திடும் வகையில் நேற்று முன்தினம் (17.7.2023) சென்னை காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் அமைந்துள்ள தியாகி செண்பகராமன், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.